தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**17 வயதுப்பிரிவு**

(01.01.2007 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## தியாகி பொன். சிவகுமாரன்

பொன். சிவகுமாரன் அவர்கள் தமிழீழ மக்களுடைய சுதந்திர வாழ்வுக்காகப் போராடிய முன்னோடிப் போராளிகளுள் ஒருவர். தமிழ் மாணவர்களால் உருவாக்கப்பட்ட மாணவர் பேரவையின் உறுப்பினராகச் செயற்பட்டவர். தமிழ் மாணவர்களின் உயர்கல்வி அனுமதியைக் குறைப்பதற்காக 1970 இல் சிங்கள அரசால் கொண்டுவரப்பட்ட வஞ்சகத் திட்டமான தரப்படுத்தலை எதிர்த்து முனைப்போடு போராடியவர்.

தொடர்ந்து வந்த சிங்கள அரசுகளின் கொடிய அழுத்தங்களுக்கு எதிராக, தமிழ் இளையோரை ஒன்றிணைத்து அமைதிவழிப் போராட்டங்களை முன்னெடுத்தவர். இதனால், அவர் சிங்கள அரசால் தேடப்பட்டார். 1974 யூன் 5 ஆம் நாளன்று யாழ்ப்பாணம் கோப்பாயில் இலங்கை அரச படைகளால் சுற்றிவளைக்கப்பட்டபோது நஞ்சுண்டு, தமிழீழ விடுதலை வரலாற்றில் முதல் தற்கொடையாளராக வீரச்சாவை அணைத்துக்கொண்டார். இவரது வீரச்சாவு தமிழ் இளைஞர்களிடையே பேரெழுச்சியையும் இன உணர்வையும் கிளர்ந்தெழ வைத்தது. தமிழ் மக்களது அமைதிவழிப் போராட்டங்களைச் சிங்கள அரசு ஆயுதவழியில் அடக்கியது. இதனால், உரிமைகளைப்பெற தமிழ் இளையோர் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

'மாணவர் சக்தி மாபெரும் சக்தி' என்பதை அதன் பின்னரான காலங்களில் சிங்கள அரசுக்குத் தமிழ் இளையோர் உணர்த்தினர். தமிழ் மக்கள் சுதந்திரமாகத் தமது தாயகத்தில் வாழ்வதற்குத் தம்மைத் தாமே ஆளுகின்ற நிலை உருவாக வேண்டும் என்பதைத் தமிழர் நம்பினர். அநீதிகளைக் கடந்துசெல்லாமல் தட்டிக்கேட்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட்டது. தமிழரது மரபுவழித் தாயகமான தமிழீழத்தில் தமிழர் தன்னிறைவோடும் தன்னாட்சி உரிமையோடும் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்ற உண்மையைத் தமிழ் இளையோர் ஒன்றுசேர்ந்து வலியுறுத்தத் தொடங்கினர்.

இளமையின் ஆற்றல் வலிமை மிக்கது. அதனை இனமானம் காக்க ஒருங்கிணைத்த இவரது செயல்த்திறன் என்றென்றும் எமது இளந்தலைமுறைகளுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது. தியாகி பொன். சிவகுமாரன் அவர்களது நினைவுகள் தாங்கி, ஆண்டுதோறும் தமிழ் மக்கள் தமிழீழ மாணவர் எழுச்சி நாளைக் கடைப்பிடித்துவருகிறார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் இளையோராகிய எம்மிடமே கையளித்துள்ளார். உலகின் வளர்ந்த நாடுகளிலே பன்மொழிப் புலமையும் அரசியல் அறிவும் தொழில்நுட்பத் தேர்ச்சியும் பெற்று வாழ்கின்ற நாம், இலக்கு நோக்கிய எமது செயற்பாடுகளை அனைத்துலக அரங்கிலே முன்னெடுக்க வேண்டும்.

அறிவாயுதம் ஏந்தி ஈழத்தில் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கும்வரை ஓயாது போராட வேண்டும். கால ஓட்டத்துக்கும் அரசியல் மாற்றங்களுக்கும் ஏற்ப எமது செயற்பாடுகளைக் கட்டமைத்துக்கொள்ள வேண்டும். தியாகி பொன். சிவகுமாரன் அவர்களது உயிர் ஈகமும் ஆயிரமாயிரமாய் விதையாகிப்போன மாவீரர்களது தியாகமும் எமது மக்களின் அர்ப்பணிப்புகளும் தமிழீழ விடுதலை என்ற உயரிய இலட்சியத்திற்கானது. சத்தியம் எமக்குச் சான்றாக நிற்க, எவ்வித விட்டுக்கொடுப்பும் இல்லாது வரலாற்றுத் தெளிவோடு தொடர்ந்து போராடுவோம்.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"